பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 95

சனிக்கிழமை
01 மார்ச் 2025

மாசி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## வடக்கில் கனமழை!

யாழ். மார்ச் 1
வடக்கில் நேற்று இரவு காற்றுடன் கூடிய கன மழை கொட்டித் தீர்த்தது.
தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி ☞ 11

## மீண்டும் எரிபொருள் வரிசை

கொழும்பு, மார்ச் 1
நாட்டில் உள்ள நூற்றுக் கணக்கான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று இரவு வரிசைகள் ஏற்பட்டிருந்தன. ☞ 11

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை இன்றிரவு இணைய வழியில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள 56 மில்லியன் ரூபா விசேட நிதிக்கான அனு ☞ 10

கொக்குத்தொடுவாய்

## மீட்கப்பட்ட மனிதச் சிதிலங்களை அடையாளம்காண நடவடிக்கைகள்

முல்லைத்தீவு, மார்ச் 1
முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட மனிதச் சிதிலங்களை அடிப்படையாக வைத்து, அவை யாருடையவை என்று அடையாளம் காணும் நடவடிக்கைகளை முன்னெடுக்க காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. ☞ 10

## செம்மணி புதைகுழியில் சிறார்களும் புதைப்பா?

சட்டமருத்துவ அதிகாரி அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து மீட்கப்பட்ட சிதிலங்களில் பெருமளவானவை மனித என்புத் தொகுதிகள் என்றும், அவற்றில் சிறார்களின் பாற்பற்களும் உள்ளடங்குகின்றன என்றும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் ☞ 11

# செம்மணியில் கண்டறியப்பட்டது மிகப்பெரும் மனிதப் புதைகுழியா?

விரிவான ஆய்வுக்கு நடவடிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 1**

**யாழ்ப்பாணம் செம்மணியில் மனித என்புத் தொகுதிகள் மீட்கப்பட்ட பகுதியில், மேலதிக சிதிலங்கள் நிறைந்துள்ளனவா? என்பது தொடர்பில் விரிவான அகழ்வாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.** ☞ 10

செம்மணிப் புதைகுழி

## மார்ச் 4ஆம் திகதி கலந்துரையாடல்!

நீதிமன்றில் இடம்பெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 1
செம்மணியில் மீட்கப்பட்ட மனித என்புத் தொகுதிகள் தொடர்பிலும், அது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் எதிர்வரும் 4ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் கலந்துரையாடல் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ☞ 11

தெற்கில் இடம்பெறுவதுபோன்று

## யாழிலும் தாக்குதல் நடத்த ஆயுதக் குழுக்கள் சதி!

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 1
தெற்கில் தற்போது இடம்பெறுவதுபோன்று ஆயுதக் குழுக்களை வழிநடத்தி யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் குற்றச்செயல்களை அரங்கேற்றக்கூடும் என தெரியவந்துள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே ☞ 10

தொடர் பணிப்புறக்கணிப்புக் காரணமாக

## விபத்து, அதிதீவிர சிகிச்சைப்பிரிவு முடப்படுகின்ற அபாய நிலைக்குள்!

» 11

படைகளிடம் உள்ள காணிகளில்

## அவசியமானவை தவிர ஏனையவை விடுவிப்பு!

» 10



பூச்சந்தி பூரானி

‘உப்பில்லாட்டித்தான் உப்பின்ர அருமை தெரியிறமாதிரி புலியளின்ர அருமை இப்பதான் கனபேருக்கு விளங்கும்’

## புலிகளுடைய காலத்தில் போதைக்கு இடமில்லை!

ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 1
தமிழீழவிடுதலைப்புலிகளின் காலத்தில் போதைப் பொருள் ஊடுருவல்கள் இருக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்சுட்டிக்காட்டியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் இன்று அனைத்துப் பகுதிகளிலும் தற்போது போதைப்பொருள் பாவனை தலைவிரித்தாடு ☞ 10

வடமாகாணத்திலிருந்து

## படைமுகாம்களை அகற்ற நாங்கள் எதிர்ப்பு இல்லை

எங்களுக்கும் வேண்டவே வேண்டாம்!
சாமர சம்பத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1
வடக்கிலுள்ள முகாம்களை அகற்றுங்கள், அதில் எமக்கு பிரச்சினை இல்லை. ஆனால் படையினரை தியத்தலாவைக்குக் கொண்டுவந்து குவிக்கவேண்டாம் ☞ 10

மக்கள் ம[illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4003 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 09 19 72 73 |
| விசேட எழுத்து | E |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1070 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 5 22 28 29 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 029 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 1 0 8 7 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2109 |
| ஆங்கில எழுத்து | O |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 09 33 48 78 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5761 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 4 4 3 0 4 6 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1791 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 14 44 54 60 |
| விசேட எழுத்து | P |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 336 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 4 6 |

# 1,400 பில்லியன் நிதி ஒதுக்கீட்டை 8 மாதங்களுக்குள் பயன்படுத்துக

## மாவட்டச் செயலர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

**கொழும்பு, மார்ச் 1**

**ஆயிரத்து 400 பில்லியன் ரூபா மூலதன ஒதுக்கீட்டை அடுத்துவரும் 8 மாதங்களில் கிராமிய மட்டத்திலான பயனுள்ள திட்டங்களுக்காகப் பயன்படுத்தவேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாவட்டச் செயலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்டச் செயலர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கிராமியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதால் நாட்டின் பொருளாதாரத்தை 3 வீதத்தில் இருந்து 4 வீதமாக அதிகரிக்க முடியும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தற்போதுள்ள பொருளாதார வாய்ப்புகளைப் பலப்படுத்தவும், புதிய வாய்ப்புகளை அறிந்துகொள்ளவும் உள்ள அவசியத்தைத் தெளிவுபடுத்தினார்.

அரச சேவை தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லெண்ணம் இல்லை, அதற்கு வினைத்திறன் இன்மையே காரணம் என்று தெரிவித்த ஜனாதிபதி, திருப்திகரமான அரச சேவையை உருவாக்கி அதன் வினைத்திறனை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார். கட்டடங்கள் மற்றும் பாலங்களைக் கட்டுவது மட்டுமல்ல, வீழ்ச்சியடைந்திருக்கும் சமூகக் கட்டமைப்பை உயர்த்த வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்கான முதன்மைப் பணி மாவட்டச் செயலர்களையே சார்ந்திருக்கின்றது என்றும் தெரிவித்தார். (எ-இ)

**சுபிரி தன சம்பத** DLB

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0469 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 4 7 9 4 2 9 |

**Super Ball** DLB

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2735 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 12 46 47 65 |

**சனிதா** DLB

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 02 14 56 58 |
| வெற்றி வாரம் | 4896 |

**SASIRI** DLB

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0632 |
| வெற்றி இலக்கம் | 01 21 22 |

**லக்ன ராசி** DLB

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| கும்பம் | ♒ |
| வெற்றி இலக்கம் | 03 06 08 11 |
| சீட்டிழுப்பு வாரம் | 4447 |

**KAPRUKA** DLB

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 09 |
| வெற்றி இலக்கம் | 48 49 54 67 |
| வெற்றி வாரம் | 1911 |

**அத கோடிபதி** DLB

| | |
|---|---|
| திகதி | 28.02.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 09 25 37 43 |
| வெற்றி வாரம் | 2561 |

# முன்னாள் ஜனாதிபதி ரணில் அரசாங்க நிதியில் மோசடி!

## குற்றஞ்சாட்டுகின்றார் அமைச்சர் ஹர்ஷன

கொழும்பு, மார்ச் 1



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரச நிதியை மோசடி செய்துள்ளார். அடிப்படைக் காரணிகள் ஏதுமில்லாமல் 39 ஜனாதிபதி ஆலோசகர்களை நியமித்தார். இவர்கள் செய்த வேலை என ஏதும் கிடையாது. ஆனால் அவர்களுக்கு அதிகளவில் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதிக்கு ஆலோசகர்கள் இருக்கலாம். அதில் பிரச்சினையொன்றுமில்லை. ஏனெனில் ஜனாதிபதி அனைத்தையும் அறியமாட்டார். ஆனால் ரணில் விக்கிரமசிங்க 39 ஆலோசகர்களை வைத்துக்கொண்டுள்ளார். அவ்வாறாயின் அவருக்கு எதுவுமே தெரியாதா? தனது நண்பர்களை மகிழ்விப்பதற்காக தற்காலிகப் பதவிகளை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ஆலோசகர்கள் செய்த வேலைகளை ஆராய்ந்து பார்த்தேன், அவர்கள் பொய்யாகக் கூட வேலை செய்யவில்லை. வேலை செய்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவை என்னவென்று குறிப்பிடப்படவில்லை. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வடிவேல் சுரேஸ் பெருந்தோட்ட அபிவிருத்தி மற்றும் தேசிய ஒருமைப்பாடு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். ஆனால் அவருக்குரிய விடயதானங்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

எமது சம்பளம் பற்றிப் பேசப்படுகிறது. சுயவிருப்பத்துடன் தான் கட்சியின் பொது நிதியத்துக்கு வழங்குகிறோம். அந்த நிதி மக்களின் அபிவிருத்திக்காகவே பயன்படுத்தப்படும்- என்றார். (எ-இ)

# இரு குழுக்கள் மோதல்; சகோதரர்கள் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 1

பத்தேகம - மத்தேவில மிரிஸ்வத்த பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தகராறில் இருவர் உயிரிழந்துள்ளனர். மூவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலில் உயிரிழந்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# அரச நிறுவனங்கள் ஒத்துழைத்தாலே அரச நிர்வாகத்தை மேம்படுத்தலாம்!

## பிமல் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 1

சிறந்த அரச நிர்வாகத்தை அரசாங்கத்தால் மட்டும் தனித்துச் செய்யமுடியாது. அரச நிறுவனங்கள் அதற்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களைப் போன்று அரச உத்தியோகத்தர்களும், அதிகாரிகளும் பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறக் கூடிய வகையில் செயற்படவேண்டும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஒரு சில அரச நிறுவனங்கள் பொறுப்புடன் செயற்படுவதில்லை. ஒரு சில நிறுவனங்கள் தமது பொறுப்பு என்னவென்று தெரியாமலே செயற்படுகின்றன. . சிறு அளவிலான மோசடிகள் தொடர்பில் கவனம் செலுத்திய இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பெருமளவிலான மோசடிகளைக் கவனத்திற் கொள்ளவில்லை. இதுவும் வங்குரோத்து நிலைக்கு ஒரு காரணமாகும். இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பொறுப்புடன் செயற்படவேண்டும்.

அரசியல்வாதிகளை மக்கள் விமர்சிக்கிறார்கள். ஐந்தாண்டு பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் செல்வார்கள். ஆனால் அரச அதிகாரிகள் அவ்வாறில்லை. பதவியில் இருந்து ஓய்வுபெறும்வரை மக்கள் மத்தியில் அரச அதிகாரிகள் செல்வதில்லை. அதனால் அரச அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தலையீடுகளற்று பொலிஸாருக்கு சுதந்திரம்

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

**கடந்த காலங்களில் அரசியல்மயமாக்கப்பட்டிருந்த பொலிஸ் துறைக்கு தற்போது அரசியல் தலையீடுகள் களையப்பட்டு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ்துறை கடந்தகாலத்தில் அரசியல்மயமாக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து நாம் அத்துறையை விடுவித்துள்ளோம். பொலிஸாருக்குத் தற்போது சுயாதீனமாகச் செயற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அதற்கமைய பொலிஸார் மிகவும் திறமையுடனும், துணிவுடனும் தற்போது செயற்படுகின்றனர். பாதாளக் குழுக்கள் தலைதூக்குவதற்கு கடந்தகாலங்களில் இடமளித்துவிட்டு, அவற்றை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்று இன்று எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர். பொலிஸாரின் செயற்பாடுகள் முடங்கியுள்ளன எனக் கூறப்படுவதும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறப்படுவதும் பொய்யாகும். மக்களின் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன -என்றார். (ச-44)

### ஈஸ்டர் தாக்குதல்

## பாதிக்கப்பட்டோருக்கு 245 மில்லியன் ரூபா

கொழும்பு, மார்ச் 1

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் அறவிடப்பட்ட நிதியிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு 245 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை குறித்து தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பில் வழங்கப்பட்ட உத்தரவுக்கமைவாக, குறித்த நிதி செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சமூக ஊடக வன்முறைகள் கடந்தாண்டில் 17,000

கொழும்பு, மார்ச் 1

கடந்த வருடம் சமூக ஊடகங்கள் மூலமாக 17 ஆயிரம் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு தெரிவித்துள்ளது.

வயது வந்தவர்களுக்கு நிகழ்நிலை மூலம் 1,371 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சிறுவர் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் 60 பதிவாகியுள்ளன. இந்தச் சம்பவங்கள் சிறுவர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளின் அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகின்றன.

இதேவேளை, மொத்தம் 6,123 சமூக ஊடகக் கணக்குகள் ஹேக் செய்யப்பட்டுள்ளன, இது தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்புக் குறித்த தீவிர கவலையை எழுப்பியுள்ளது.

அத்துடன், 673 தீங்கு விளைவிக்கும் மற்றும் ஆபத்தான செயல்கள் பதிவாகியுள்ளன, இது அனைவருக்கும் பாதுகாப்பான டிஜிற்றல் தளத்தின் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## செவ்வந்தியைக் கைதுசெய்ய 11 பொலிஸ் குழுக்கள்

கொழும்பு, மார்ச் 1

கணேமுல்ல சஞ்சீவவின் கொலைக்குப் பின்னணியில் இருந்தாரெனக் கூறப்படும் 25 வயதுடைய இஷாரா செவ்வந்தியைக் கைது செய்ய நாடு முழுவதும் 11 பொலிஸ் குழுக்களைப் பயன்படுத்தி சிறப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக பொதுப்பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். அத்துடன் தேவையான நடவடிக்கைகளுக்காக மற்றொரு பொலிஸ் குழு துபாய்க்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய வெளிநாட்டு பாதாள உலகத் தலைவர்களையும், கொலையை திட்டமிட்டவர்களையும் விரைவில் நாட்டிற்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ச-இ)

## துப்பாக்கிச்சூட்டில் 9 வயதுச் சிறுமி பலி

கொழும்பு, மார்ச் 1

ஹெட்டிபொலபொலிஸ்பிரிவின் மகுலகமப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 9 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். பன்றிகளை வேட்டையாட வந்த சிலரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டிலேயே குறித்த சிறுமி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த சிறுமியின் பாட்டி குளியாப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து வேட்டைத் துப்பாக்கியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)




'மா பழுத்தால் கிளிக்காம், வேம்பு பழுத்தால் காக்கைக்காம்' எண்டது பழமொழி. அதைமாதிரி "பள்ளிக்கூடத்துக்கு லீவு விட்டால் ரியூசனுக்காம்" எண்டும் மாத்தோணும். அண்ணன் எப்ப சாவான் திண்ணை எப்ப காலியாகும்? எண்ட கணக்கில, எப்பவெல்லாம் பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு லீவு குடுக்கினமோ இதுக்காண்டித்தான் வெய்ட் பண்ணிக்கொண்டிருந்தவை மாதிரி ரியூசன்காரர் 'ஸ்பெசல் கிளாஸ்' போட்டிடுவினம். சிவராத்திரிக்கு பிள்ளையள் நித்திரை முழிச்சாலோ இல்லாட்டி திருக்கேதீச்சரம், கோணேச்சரம் மாதிரி தூர இடத்தில இருக்கிற கோயிலுக்குப் போனாலோ அடுத்த நாள் பள்ளிக்கூடம் போறதும், நித்திரை தூங்காமல் படிக்கிறதும் கஷ்டமாயிருக்கும். அதால சிவராத்திரிக்கு அடுத்தநாள் ( வியாழக்கிழமை) பள்ளிக்கூடங்களுக்கு லீவு எண்டு வடக்கு ஆளுநர் அறிவிச்சவர். அவரின்ர அறிவிப்பு வந்த அஞ்சாவது நிமிசமே, ரியூசன்காரர் எல்லாரும் தங்கட வட்ஸப் குரூப்புகளில "வியாழக்கிழமை பகல் வகுப்பு இருக்கு" எண்டு ரைம் ரேபிள் போட்டு அறிவிச்சிட்டினமாம். பள்ளிகூடம் லீவு எண்டு புளுகப்பட்ட பிள்ளையளுக்கு ரியூசன்காரர் இப்பிடி அறிவிச்சதும் இடிவிழுந்தமாதிரிப் போட்டுது.

முதல்நாள் கோயிலுக்குப் போய் இரவிரவா முழிச்சுப்போட்டு, அடுத்தநாள் அந்தக் களைப் போட ரியூசனுக்குப்போய் இருந்தால், பிள்ளையளுக்கு படிப்பிக்கிறது மூளையில ஏறுமோ? கனபிள்ளையள் வகுப்பில தூங்கி விழுந்ததுக்கும் ரியூசனில பேச்சு விழுந்ததாம். அப்பிடி பிள்ளையளை வகுப்பில தூங்கி விழவைச்சது ரியூசன்காரரின்ர பிழைதானே? பிள்ளையள் நித்திரை முழிச்சிட்டு அடுத்தநாள் படிச்சுக் கஷ்டப்படக் கூடாதெண்டுதானே ஆளுநர் லீவு அறிவிச்சவர். அந்த லீவு ஏன் குடுத்தது எண்டே தெரியாமல், அந்த லீவையும் காசாக்கிப் போடோணும் எண்ட அந்தரத்திலையும், சிலபஸை வேளைக்கே முடிக்கோணும் எண்ட ஆர்வக்கோளாறிலையும்தான் இப்பிடி சிவராத்திரியால கிடைச்ச லீவையும் அநியாயமாக்கி, பிள்ளையளை ரியூசன்காரர் வதைச்சிருக்கினம்.

இனிமேல் இப்பிடி லீவுகள் அறிவிக்கேக்க, ஆளுநர் பள்ளிக்கூடங்களுக்கு மட்டுமில்லாமல் ரியூசன்களுக்கும் சேர்த்து லீவு அறிவிச்சாரெண்டால், கொஞ்சப்பேராவது அந்த உத்தரவுப்படி ரியூசன்களை அண்டைக்கு நிப்பாட்டுவினம். இல்லாட்டி இப்பிடி, பிள்ளையளுக்கு குடுக்கிற லீவுகளை எப்பிடி எக்ஸ்ட்ரா கிளாஸ் போட்டு காசாக்கலாம் எண்டுதான் நிப்பினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவு களாகவே இருக்கும். சிலருக்கு விருந்து விசேடங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும்.

**கடகம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கன்னி:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**துலாம்:** எதிலும் நிதானமாக செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவி னர்கள் வருகையால் செலவுகள் ஏற்படும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**தனுசு:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறை வேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**மகரம்:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக் கூடும்.

**மீனம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு சுமாராகத்தான் இருக்கும்.

# சிறுதானியச் செய்கை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச். 1

தற்போது பெய்துவரும் மழையைப் பயன்படுத்தி யாழ். குடா நாட்டு வயல்களில் சிறுதானியச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் தயாராகிவருகின்றனர்.

அதற்காக வயல்களைப் பதப்படுத்தும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சிறுதானியச் செய்கைக்கான விதைகள் கமக்கார அமைப்புகளூடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ச-25, 17)

## கல்மடுக்குளத்தின் கீழ்

# 2,126 ஏக்கரில் நெற்செய்கை 150 ஏக்கரில் சிறுதானியம்

கிளிநொச்சி, மார்ச் 1

இவ்வாண்டு கிளிநொச்சி கல்மடுக்குளத்தின் 2 ஆயிரத்து 126 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்ச்செய்கையும் 150 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானியச் செய்கையும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயிர்ச்செய்கைக்கூட்டம் கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் கண்டாவளைப் பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் தலைமையில் நேற்று நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ச-113)

# மூளாயில் இலவச கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடக்கு மாகாண தந்தை செல்வா நற்பணிமன்றத்தினால் வருடாந்தம் தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இலவச கண் பரிசோதனை மூளாய் இந்து இளைஞர்மன்றத்தின் தலைவர் சி. மயூரன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை இந்து இளைஞர் மன்ற பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பிரதேசசபைச் செயலாளர் ச. பாலரூபன் பங்கேற்கவுள்ளார். (ச-இ)

# தேங்காய் விலை சரியும்!

கொழும்பு, மார்ச் 1

மே மாதத்தின் பின்னர் தேங்காய் மீண்டும் பழைய விலைக்கு திரும்பும் எனத் தேங்காய் மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

தேங்காய் இறக்குமதிக்காக அனு மதி பெற்ற நிறுவன உரிமையாளர்கள் எதிர்வரும் சில தினங்களில் இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் அதன் தலைவர் சாந்த ரணதுங்க தெரிவித்தார். (ச-இ)

# கலைவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 1

'எழுச்சியகம்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் வருடாந்தக் கலைவிழா நிகழ்வு நிறுவனத்தின் பொதுச்செயலாளர் தே. லக்ஸ்மன் தலைமையில் எழுச்சியக முன்றலில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது, 'அரிச்சந்திர மயான காண்டம்' இசை நாடகமும், நடன ஆற்றுகைகளும், பாடல்களும், கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளன.

விழாவில் பிரதம விருந்தினராக நலன்விரும்பி சி. பிறின்ஸ் கௌட்றி, சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் 'கலைஞானச் செல்வன்' ஏ. ஆர். விஜயகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 1

இசை வேளாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், நாதஸ்வர வித்துவான் இ. கேதீஸ்வரனின் 'தமிழர் செவ்வியல் இசையும், நாகசுர தவில் நிகழ்த்துகையும்' நூல் வெளியீடு நல்லூர் துர்கா மணி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர்களான அ. சண்முகதாஸ், ச. மனோன்மணி, சிவலிங்கராசா, நா. சண்முகலிங்கம் மற்றும், தமிழ்நாடு இசை ஆர்வலர் சரவணன், தமிழருவி த. சிவகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். நூலின் முதற்பிரதியை பிரபல வர்த்தகர் எஸ். பி. நாகரத்தினம் பெறுவார். (ச- 25)

# சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை சதுர்த்தி உற்சவம் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு சிறப்பு அபிஷேக பூஜைகளும் இடம்பெற்று சுவாமி வீதி உலா வருவார். (ச-25. 17)

## இந்திய மீனவர்கள் அத்துமீறல்

# கேள்விகேட்ட மீனவர் பிரதிநிதிகளிடம் எதிர்க்கேள்வி கேட்டார் துணைத்தூதுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 1

எல்லைதாண்டி வரும் இந்திய மீனவர்களை இந்தியக் கடற்படை ஏன் தடுக்கவில்லை? என யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியிடம் யாழ். மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பியபோது, எல்லைதாண்டி வரும் மீனவர்களை ஏன் உங்கள் நாட்டுக் கடற்படை தடுக்கவில்லை? என அவர் பதில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி மண்டைதீவுக் கடற்றொழிலாளர் சங்கம் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டமும் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தை நோக்கிப் பேரணியும் நடத்தியது. மீனவர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளியைச் சந்தித்து சுமார் 45 நிமிடங்கள் கலந்துரையாடினர். அதன்போது மீனவர்கள் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளனர்.

மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய இந்தியத் துணைத்தூதுவர், உங்கள் கஷ்டம் புரிகின்றது. அரசியல் கலப்பு இன்றி நீங்கள் செய்யும் போராட்டம் வரவேற்புக்குரியது. இரு நாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் நேரடியாகச் சந்தித்து இந்தப் பிரச்சினை தொடர்பாகப் பேசுவதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும். இந்த விடயம் தொடர்பாக எப்போது வேண்டுமானாலும் என்னைச் சந்திக்கமுடியும் என்று தெரிவித்துள்ளார். (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# உறங்கும் உயிர்ச்சாட்சியம்!

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட உடைகளில் துப்பாக்கிச்சூடுகள் மற்றும் சந்தேகத்துக்கு இடமான தடயங்கள் உள்ளன என்று கூராய்வு அறிக்கை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. உடைகளில், கைகளால் தைக்கப்பட்ட இலக்கங்கள், த.வி.பு என்று குறிப்பிடப்பட்டுள்ள அடையாளப்படுத்தல்கள் காணப்படுகின்றன என்றும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கின்றது. புதைகுழிகள் இலங்கைக்குப் புதியன அல்ல. அவற்றின்பால் ஏற்பட்ட பட்டறிவால், கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழியொன்று உள்ளதாக 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் முதன் முதல் வெளிப்படுத்தப்பட்டபோது தமிழர் தாயகத்திலிருந்து பெரும் கவனக்குவிவு ஏற்பட்டது. எனினும், நாம் அனைவரும் சந்தேகப்பட்டதை விடவும், நிபுணர்கள் எதிர்வுகூறியதை விடவும் பல மடங்கு பெரிதானதாகவும் ஏராளம் தடயங்கள் மற்றும் எச்சங்களைக் கொண்டதாகவுமே புதைகுழி அமைந்திருந்தது. அதன் தொடர்ச்சியான ஒரு சாட்சியமே தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள கூராய்வு அறிக்கை.

ஆனால், இதற்கு முன்னரும் எத்தனையோ மனிதப் புதைகுழிகள் தாயகத்திலும் , வெளியிலும் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் அந்த மனிதப் புதைகுழிகள் அதிகாரக் கதிரைகளின் அழுத்தத்தால் மூடி மறைக்கப்பட்டனவே அன்றி நீதியானதும் நியாயமானதுமான விசாரணைகளையும் தீர்ப்புகளையும் எதிர்கொள்ளவேயில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும் அவ்வாறான மழுங்கடித்தல்கள் இடம்பெற்றுவிடாது தடுப்பதற்காக நாம் அனைவரும் ஓரணியிலும் மிகமிக அவதானமாகவும் இருக்கவேண்டியது மிகவும் அவசியமானது. கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனிதப்புதைகுழி விவகாரங்களிலும் சர்வதேசம் தலையிடுவதற்கான ஓர் ஆரம்பப்புள்ளியாகவும் இந்த விவகாரத்தை நாம் மாற்றிக்கொள்ள முடியும். அதற்குரிய இயலுமை கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு இருக்கின்றது என்பதைத்தான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கூராய்வு அறிக்கை கட்டியம் செய்கின்றது.

தமிழர்களின் உரிமைக்குரல்களும், போராட்டங்களும் எவ்வாறு புதைகுழிகளுக்குள் புதைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதையொத்ததுதான் தேசிய மக்கள் சக்தியின் கடந்தகால வரலாறும். தற்போது ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தியினரும்கூட ஒருகாலத்தில் தமது உறவுகளை, தோழர்களை புதைகுழிகளுக்குள் தேடிக் கொண்டிருந்தவர்கள்தான். இதை அவர்களே பலமுறை கூறியிருக்கின்றனர். எனவே, புதைகுழி விடயத்தில் வலியை உணர்ந்த தரப்பொன்று அதிகாரத்தில் உள்ளதால், தமக்கு நீதிகிட்டும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களின் மனங்களில் இருக்கவே செய்கின்றது. தமிழர்களின் ஆணையாலும் ஆட்சிப்பீடம் ஏறியவர்கள் என்ற ரீதியில் இந்தப் புதைகுழிகள் விடயத்தில் நீதியை நிலைநாட்ட வேண்டிய பெரும்பொறுப்பும் அரசாங்கத்துக்கு உள்ளது.

புதைகுழிகளை 'ஓர் உயிர்ச்சாட்சியமாக' மாற்றுவதும், அல்லது அதைப் புதைந்தே போகட்டும் என்று விட்டு விடுவதும் அரசாங்கத்தின் கைகளில் இருக்கின்றது. நீதி மறுக்கப்படும் பட்சத்தில், அது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழர்களுக்குச் செய்யும் துரோகமாக மட்டும் இராது. மாறாக, தமது தோழர்களின் துயர்க்கதைகளுக்குமான அவமானமாகவே அமையும்.

நாளொரு நல்வார்த்தை

சிலவற்றின் மீதான நம்பிக்கை மற்றும் உற்சாகம் வாழ்க்கையை மதிப்புடையதாக உருவாக்குகிறது.

—ஒலிவர் வெண்டெல் ஹோல்ம்ஸ்




# இலங்கையில் வறுமை 52 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 1

கடந்த 2024ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் வறுமை 45 - 52 வீதத்துக்கு இடையே அதிகரித்துள்ளதாக வறுமை பகுப்பாய்வு மையம் புதிய அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது. அதன்படி, சமூக பாதுகாப்பு வலையமைப்பை மேலும் விரிவாக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அஸ்வெசும நன்மைத்திட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் 2,600 குடும்பங்களை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 50 வீதமான வீடுகளில் வறுமை காரணமாக இன்னுமும் நவீன முறைக்கேற்ப மின்சார தேவைகள் பூரணப்படுத்தப்படவில்லை.

அஸ்வெசும நலன் திட்டத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் குறித்த தொகையை மின்சாரக் கட்டணத்துக்கு 25 வீதமும், உணவுக்காக 16 வீதமும் ஒதுக்குகின்றனர். எனவே அஸ்வெசும திட்டத்துக்கு மேலதிகமாக பணம் ஈட்டுவதற்கான ஏதேனும் ஊக்கத்தொகை வழங்கப்படவேண்டும் எனவும் வறுமைப் பகுப்பாய்வு மையம் பரிந்துரைத்துள்ளது. (ச-இ)

# டிஜிற்றல் திட்டம்; ஜப்பான் முதலீடு!

கொழும்பு, மார்ச் 1

இலங்கையில் துறைமுகம் சார்ந்த திட்டங்கள் மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களுக்கு முதலீடு செய்ய ஜப்பானிய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான ஜப்பானியத்தூதுவர்இசொமதா அகியோவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில்நடைபெற்ற சந்திப்பின்போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது. போரால் பாதிக்கப்பட்ட வடக்குப் பிராந்தியத்தில் தேசிய நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக ஜப்பான், சுவிட்சர்லாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியன இணைந்து மேற்கொள்ளும் திட்டம் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டதோடு, அதன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் தூதுவர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குத் தெளிவுபடுத்தினார். (ச-இ)

# புதிய அரசியற்கட்சிகள் விண்ணப்பிக்க காலக்கெடு

கொழும்பு, மார்ச் 1

2025 ஆம் ஆண்டில் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுத் தெரிவித்துள்ளது.

தேர்தல் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகக் கருதப்படுவதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி இரவு 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். அல்லது சம்பந்தப்பட்ட கட்சியின் செயலாளர் நேரில் தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கலாம் என்றும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# ரூபா உயர்வு

கொழும்பு, மார்ச் 1

இந்த வாரம் முழுவதும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் உயர்வடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 291.40 ரூபாவாகக் காணப்பட்ட நிலையில் நேற்று 291.19 ரூபாவாகக் குறைவடைந்துள்ளது.

அதன்படி அமெரிக்க டொலரின் விற்பனைப் பெறுமதி நேற்றுமுன்தினம் 299.98 ரூபாவாக காணப்பட்டதோடு, நேற்று 299.73 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. (ச-இ)

# மின்சாரசபையிடமிருந்து வருடாந்த வட்டி அறவீடு

கொழும்பு, மார்ச் 1

மின்சார இணைப்புகளை வழங்கும்போது அனைத்து நுகர்வோரிடமிருந்தும் வசூலிக்கப்படும் பாதுகாப்பு வைப்புத் தொகைக்கான வருடாந்த வட்டியை மின்சாரசபை செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. குறித்த உத்தரவானது நேற்று உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



நாளை
ஞாயிற்றுக்கிழமை - மாசி - 18
02.03.2025
சுபநேரம் : 09.27 - 10.57
ராகுகாலம் : 04.57 - 06.27


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பனையோலை சார் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 1
சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூளாய்ப் பிரதேசத்தில் பனையோலை சார் கைவினைத்திறன் பயிற்சி வகுப்புகள் சம்பிரதாயபூர்வமாக அண்மையில் ஆரம்பித்துவைக்கப் பட்டுள்ளன.

மூளாய்ப் பிரதேசத்தின் தொண்டு நிறுவனங்களில் ஒன்றான "மலரும் மூளாய் அமைப்பின்" ஒருங்கிணைப்பில் தேசிய அருங்கலைகள் பேரவையினால் குறித்த வகுப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் சங்கானைப் பிரதேச செயலர் கவிதா உதயகுமார், மூளாய் கிராம அலுவலர் சிவரூபன் , தேசிய அருங்கலைகள் பேரவையின் மாவட்ட உத்தியோகத்தர் வேல்முருகன், சங்கானை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25,125)

## இல்ல மெய்வன்மை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி தொடர்மழை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை சிரேஷ்ட பிரிவுப் போட்டியும், நாளை ஞாயிற்றுக்கிழமை கனிஷ்டப் பிரிவுப் போட்டியும் நடைபெறவிருந்தன.

இந்தநிலையில் தொடர்மழை காரணமாகப் போட்டியை நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லாமையினால் பிற்போடப்பட்டுள்ளதாகக் கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

### எள்ளங்குளத்தில் நேற்று

# சாந்தனின் துயிலாலயம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

**எள்ளங்குளம் துயிலுமில்லத்தில் சாந்தனின் புகழுடல் விதைக்கப் பட்ட இடத்தில் சாந்தனின் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள 'சாந்தன் துயிலாலயம்' சாந்தனின் தாயாரால் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.**





அரசாங்கங்களாலும், அரசியலாலும், சட்டத்தாலும் , கடவுள்களாலும் 33 ஆண்டுகள் ஏமாற்றப்பட்ட ஒரு தாயின் ஏமாற்று அடையாளமாக இந்தத் துயிலாலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கைதாகி சுமார் 32 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டு விடுதலையான சாந்தன், திருச்சி சிறப்பு முகாமில் குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த 2023ஆம் ஆண்டு முதல் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி காலமானார். அவரது விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் 33 வருடங்களாகப் போராடிவந்தனர். சிறையில் இருந்து விடுதலையான பின்னர் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவரை, மீள இலங்கைக்கு அழைத்துவர குடும்பத்தினர் சுமார் ஒன்றரை வருட காலமாகப் போராடினார்கள்.

எனினும் அவரது உயிரற்ற உடலையே இலங்கைக்கு கொண்டு வந்து அவரது சொந்த ஊரில் விதைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ச- 27,125,66,20,100)



புங்குடுதீவு கமநல சேவைகள் நிலையத்தினால் 'பிடியளவு கம நிலத்துக்கு' எனும் தேசிய வேலைத்திட்டத்துக்கான துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நிகழ்வு அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ச-25,125)

## உடைமையில் கசிப்பு இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மார்ச். 1
பனிப்புலத்தில் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 26 வயதுடைய இளைஞர் இளவாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-25,125)



### இந்திய மீனவர்களின் விடுதலைக்காக

## தங்கச்சிமடத்து மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டம்

சென்னை, மார்ச் 1
இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை படகுகளுடன் உடன் விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தி தமிழகம் தங்கச்சிமடத்தில் மீனவர்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் இரவு, பகலாக நடைபெறும் எனவும் மத்திய அரசு படகையும் மீனவர்களையும் விடுதலை செய்வதாக உறுதியளித்தால் மட்டுமே இந்தப் போராட்டம் கைவிடப்படும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை தமிழக மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி கடந்த ஐந்து நாள்களாக தொடர் வேலைநிறுத்தப்போராட்டத்திலும் மீனவர்கள் ஈடுபட்டுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66,100)



"பாரி அறக்கட்டளை" கல்விக்கான சமூகப்பணி அமைப்பினர், மூளாய் அ.மி.த.க. பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக புதிய நிழற்பிரதி இயந்திரம் ஒன்றினைக் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கிவைத்தனர். இதற்கான நிதிப்பங்களிப்பினை நெதர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழும் உறவினர் வழங்கிவைத்தார். (ச-25, 125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியற்கைதிகளுக்கு ஜனாதிபதி மன்னிப்பு?

## ஒருவாரத்துக்குள் பதில் நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1
தமிழ் அரசியற் கைதிகளை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிப்பது தொடர்பில் எதிர்வரும் ஒரு வாரத்துக்குள் பதில் வழங்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் விசேட அறிக்கையொன்றை விடுத்து கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இதன்படி,
தற்போது எத்தனை தமிழ் அரசியற் கைதிகள் சிறையில் உள்ளனர்?
எந்தெந்த சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்?
அவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள்?
மனிதாபிமான அடிப்படையில் அல்லது ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ் அவர்களை விடுதலை செய்யமுடியுமா?
ஆகிய கேள்விகளையே சிறீதரன் எம்.பி. எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார,

'இது மிகவும் முக்கியமான பிரச்சினையாகும். எனவே, இன்றைய தினத்திலேயே பதிலளிக்க முயற்சித்தேன். எனினும், பாதீட்டில் நீதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நாளை நடைபெறவுள்ளதால் அமைச்சு அதிகாரிகள் அனைவரும் வேலைப்பளுவில் உள்ளனர். எனக்கு ஒரு வாரம் தாருங்கள். முழுமையான பதில்களை நிச்சயம் வழங்குவேன்' - என்றார். (ம-44)

PEOPLE'S BANK
Pride of the Nation

### கேள்விப்பத்திர அறிவித்தல் மக்கள் வங்கி சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ் பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/ பல்கலைக்கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி, ஆகிய சேவை நிலையங்களிலும் யாழ் / பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 5000/= ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2025 பங்குனி 19 ஆம் திகதி புதன்கிழமை மு.ப.9.00 பி.ப.4.00 மணி வரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களை பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2025 பங்குனி 20 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல: 82 கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Fax : 021-2222602
E-mail : jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல : 021-2222601/021-2228602

(CR/44434) J-1

### கடை வாடகைக்கு

சுன்னாகம் ஜெட்மோட்டஸ், தனியார் கல்வி நிறுவனம் ஆகியவற்றிற்கு அருகில் அமைந்துள்ள கடை வாகைக்குண்டு.

077 744 7909

### ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மானிப்பாய்

### பதவி வெற்றிடம்

சாரதி (Driver)


**தகைமைகள்**

* சாரதி அனுமதிப்பத்திரம் (பாரவூர்தி) உடையவராக இருத்தல் வேண்டும்.
* வயதெல்லை: 35 - 55
* ஆகக்குறைந்தது 02 வருட அனுபவம்.
* நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**மேலதிக தகவல்களுக்கு:**
**திரு. ஜீவன் - 077 844 8020**

Angel International School, Mathers Lane, Manipay

# மரண அறிவித்தல்



மண்ணுலகில் 23.07.1953 விண்ணுலகில் 25.02.2025

## சுந்தரம் சண்முகவடிவேல் (பொறுப்பண்ணை)

**(முன்னாள் காசாளர், மகேந்திரா ஸ்ரோர்ஸ், கொழும்பு)**

வேலணை மேற்கு ஆறாம் வட்டாரம், சிற்பனை முருகமூர்த்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் பொறுப்பண்ணை என்று அன்பாக அழைக்கப்பட்டவருமான திரு சுந்தரம் சண்முகவடிவேல் அவர்கள் கடந்த 25.02.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற உயர்திரு சுந்தரம் – மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற உயர்திரு பசுபதிப்பிள்ளை (பொன்னையா) - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், பன்னீர்ச்செல்வியின் அன்புக் கணவரும், சுதர்ஜினி, சுகந்தினி, சுரேஷ்குமார், ஜெயந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நீலாம்பிகை, ஞானசூரியன் மற்றும் ஞானாம்பாள் (பொற்கொடி), கருணைநாயகி (பவளம்), காலஞ்சென்ற தங்கவடிவேல் மற்றும் லோகநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற பகீரதலட்சுமி, ஜெயமோகனரெட்ணம், ரமணி, தெய்வேந்திரன், மற்றும் பாசுபதம், காலஞ்சென்ற காசிலிங்கம், மற்றும் பன்னீர்செல்வம், அருட்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இதயவண்ணன், உதயகுமார், தர்ஷிகா, புஸ்பலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபித்தா, லகீஷன், சிந்துசன், மிதுஷ்கா, கர்விஷ், நிகாஷ், அனனியா, ஷஜேத் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை பொரெல்ல (Borella) Colombo-8 இல் அமைந்துள்ள ஜெயரெட்ணம் மலர்ச்சாலையில் காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் தகனத்திற்காக பொரெல்ல பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
+96740149557 - பன்னீர்செல்வி (மனைவி)
+647-622-4728 - சுரேஸ் (மகன்)
+416-827-5866 - இதயன் (மருமகன்)
+416-845-7774 - புஷ்பன் (மருமகன்)
+44-7990-014448 - சுகந்தி (மகள்)
+416-450-3984 - லோகன் (தம்பி)

(CS/2626) J-1

**தகவல்: குடும்பத்தினர்**

Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## விநாயகமூர்த்தி மல்லிகாதேவி

மீசாலை புத்தூர்ச் சந்தியைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி மல்லிகாதேவி அவர்கள் நேற்று முன்தினம் (27.02.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராசரத்தினம் (தம்புநாதர்) -நல்லம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மௌலீஸ்வரன், பரமேஸ்வரன், இரத்தினதேவி, நாகேஸ்வரன் மற்றும் கேதீஸ்வரன், பாக்கியமங்கை, இளஞ்சிங்கநாதன், வசந்தாதேவி, தெய்வேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் யுகானந்தன், கயல்விழி, காலஞ்சென்றவர்களான மலர்விழி, துவாரகை மற்றும் சதானந்தன், வதனி (ஆசிரியர்), குகானந்தன், ரதிகரன், கீர்த்தீசன், அருள்சோதி ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் மீசாலை மேற்கு மீசாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**சதா (மகன்)-077 638 8996**

## பெயர் மாற்றம்

நாதன் குடியிருப்பு, புன்னைநீராவி விசுவமடுவில் வதியும் நவரத்தினம் றாஜினி ஆகிய நான் எனது பெயரை நவரத்தினம் றாகினி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் நவரத்தினம் றாகினி என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு தெரிவிக்கின்றேன்.

-நவரத்தினம் றாகினி-

(CS 28933) V-1

## தென்னக்கோனை கைதுசெய்க!

2023ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி மாத்தறையில் நடந்த துப்பாக்கிச் சூடு தொடர்பாக தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்ய மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(ம)

# மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 05 . 1961



மறைவு
28 . 02 . 2025

## அழகக்கோன் நிர்மலா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அழகக்கோன் நிர்மலா அவர்கள் நேற்று (28.02.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அழகக்கோன் மற்றும் சிவயோகேஸ்வரி தம்பதியின் அன்பு மகளும், வனிதா, காலஞ்சென்ற மேகலா மற்றும் அருளானந்தன், சிவானந்தன் (நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

**ஆனைக்கோட்டை வீதி,**
**கொக்குவில் மேற்கு.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 962 7340, 021 221 5567**

# INVITATION FOR BID
## Council - 2025
## THUNUKKAI PRADESHIYA SABHA - THUNUKKAI

1) The Chairman, Local Authority Procurement Committee on behalf of Thunukkai Pradeshiya Sabha, Northern Province invites sealed bids from eligible and qualified Bidders for the works described in the table below.

2) Qualification requirements are indicated in section 4 of the bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.

3) Interested bidders may obtain further information from Chairman, Procurement committee, Thunukkai Pradeshiya Sabha,Thunukkai.(T.P No: 0212284532) and inspect the bidding documents at the address given below from any working days 9.00 hrs to 15.00 hrs from 2025.03.01 till 2025.03.14

4) A complete set of Bid Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written application to the Thunukkai Pradeshiya Sabha,Thunukkai. From 2025.03.01 until 2025.03.14 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non-refundable fee of Rs.3,000.00. The method of payment will be by cash.

5) Bids shall be delivered of Original and duplicate to the address Secretary, Thunukkai Pradeshiya Sabha,Thunukkai, on or before 15.00 hrs on 2025.03.14 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend.

| S. No | Contract No | Description of Work | Source of Fund | Estimated Civil Cost (Million) | Contract Period | Required Bid Security | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Bid Validity Days | Bid Validity Period | Security amount | Security Validity Period |
| 01 | NP/44(5)/03/PROC/2025/COUNCIL/NS/01 | Supplying, Installation, Testing, Commissioning and Maintenance of 02 Nos of 20kW ON - Grid Roof top at Thunukkai Pradeshiya sabha | council | 5.5 | 14 Days | 14 Days | 2025.03.28 | 110,000.00 | 2025.04.25 |

Bid security is as following table

**Bid invitation table**

- Pre-bid meeting will be held on 2025.03.07 at 11.00 Hrs in Thunukkai Pradeshiya Sabha, Thunukkai. Interested bidders may attend the pre bid meeting at their own expenses.
- The procurement committee has the power to reject the bid as totally or partly and to call retender

**Chairman,**
**Local Authority Procurement Committee**
**Thunukkai Pradeshiya Sabha,Thunukkai.**
**2025.03.01**

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலியும் 26வது அகவை தினமும்

அன்னை மடியில்
01 . 03 . 1999



ஆண்டவன் அடியில்
13 . 09 . 2021

## அமரர் சிறீவாணன் டினோசிகா





ஆண்டுகள் நான்கு உருண்டோடி மறைந்தாலும்
ஆறமுடியவில்லையம்மா எம்மால் உன் இழப்பை
பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
புன்சிரிப்பின் பிறப்பிடமாய் வாழ்ந்த எங்கள் டினோசிக்குட்டியே !
புன்னகையோடு நீர் உலாவிவந்த இடமெல்லாம் வெற்றிடமாய்
இருப்பதை எம்மால் இன்றும் தான் தாங்க முடியவில்லை
அல்லும் பகலும் உம் நினைவு எம்மை வாட்டி வதைக்கிறதே
கண்முன்னே நீர் வாழ்ந்த காலம் கனவாகிப்போனாலும்
எம் முன்னே உம் திருவதனம் எந்நாளும் வந்து நிற்கின்றதே
மண்விட்டு மறைந்து நீர் அவசரமாய் அற்பஆயுளில்
விண்ணோக்கி சென்றுவிட்டாலும், கண்விட்டு மறையாமல்
எம்மோடு வாழ்ந்துகொண்டே இருக்கின்றீர்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

உம் ஆத்மா சாந்திக்காக,
பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்.**

**சங்குவேலி,**
**மானிப்பாய்.**


(CS/57628) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## அமரர் கந்தையா (பத்தர்), பாலபரமேஸ்வரன் (ராசுப் பத்தர்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா (பத்தர்) பாலபரமேஸ்வரன் அவர்கள் (2025.02.28) அன்று (வெள்ளிக்கிழமை) காலமானார்.

அன்னார் அமரர்களான கந்தையா-சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மகனும் அமரர்களான கந்தசாமி (பத்தர்) மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் மனோரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும் யுசெந்தி, நிஷாந்தஜி (சுவிஸ்), ஸ்ரீரோகினி (கொலண்ட்), வினோஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சன், நிரோஜா, மிதுர்ஷன், விஜயமோகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிரிஷாந், தேஜாஸ்ரீ, நிஹானா, நித்தாரி, நித்தாரா, ரிஷிகாந், ஆதர்ஸ், டிலான், டயான், மீரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (2025.03.02) ஞாயிற்றுக்கிழமை 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 1949.09.13 — இறப்பு 2025.02.28

வேம்பன் வீதி
(ஒஸ்காலேன்)
உரும்பிராய்

(CS 2631) V-1

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## அமரர் பொன்னுத்துரை நல்லம்மா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், மில் ஒழுங்கை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நல்லம்மா அவர்கள் கடந்த 26.02.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை (இ.போ.ச முன்னாள் சாரதி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, வேலாயுதம், சிவபாக்கியம், துரைசிங்கம் ஆகியோரின் சகோதரியும், சுசிலாதேவி, காலஞ்சென்ற சாந்தாதேவி மற்றும் சிவகுமார் (ஜேர்மனி), சறோஜினிதேவி (லண்டன்), மோகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சோமசுந்தரம், குணநாயகம், நந்தினி (ஜேர்மனி), விவேகானந்தராஜா (லண்டன்), றொசானி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற இந்திரகுமாரன் மற்றும் பாலகௌரி, பிரதீபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், காரைநகர்), ரஞ்சனா, அரங்கேசன் (சுவிஸ்), பார்த்தசாரதி (அனல்மின்நிலையம், நுரைச்சோலை), மதுசானி, வசீகரன் (லண்டன்), பாவலன் (ஜேர்மனி), மாயவன் (ஜேர்மனி), நாரணன் (ஜேர்மனி), மோனீஷா (லண்டன்), நிதர்சன் (லண்டன்), கிரோசிக்கா (லண்டன்), சிவானிக்கா (லண்டன்), துவாரகன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், டிலிபிரசான், டிலெக்சனா, காலஞ்சென்ற தஸ்விகன் மற்றும் டனுஸ்ரிகன், கேஷாயினி, மிர்த்விக் (புத்தளம்), சுதிக்ஷா (புத்தளம்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் மல்லாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னை மடியில் 28.03.1935 — சிவனடியில் 26.02.2025

மில் ஒழுங்கை,
மல்லாகம்.

(CS/57624) J-1

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்கப்பட்ட...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட ஆடைகள் மற்றும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், இலக்கங்கள், இதர அடையாளப் படுத்தல்கள் தொடர்பான கூராய்வு அறிக்கை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் சட்டமருத்துவ அதிகாரியால் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்தே கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட மனிதச் சிதிலங்களை அடிப்படையாக வைத்து, அவை யாருடையவை என்பது தொடர்பில் அடையாளப்படுத்தக்கூடியவாறு இருந்தால் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

உறவினர்கள் உரிமைகோரும் சந்தர்ப்பத்தில், மரபணுப் பரிசோதனையின் அடிப்படையில் உறவுமுறை உறுதிப்படுத்தப்படும். இது தமது உறவுகளுக்கு என்ன நடந்தது எனக் காத்திருக்கும் உறவுகளிற்கு ஒரு பதிலை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்படி,

த.வி.பு.இ. 1333, த.வி.பு.இ. 1302, த.வி.பு.இ. 0043, த.வி.பு.இ. 225, த.வி. பு.ஒ.3094 ஆகிய அடையாளப்படுத்தல்கள் உட்பட பல அடையாளப்படுத்தல்கள் மீட்கப்பட்ட உடைகளில் குறிப்பிடப் பட்டுள்ளன என்று மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-26-125)

## செம்மணியில்...

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, யாழ். மாவட்டச் சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவநாதன் செம்மணியில் மீட்கப்பட்ட மனிதச் சிதிலங்கள் தொடர்பான அறிக்கையை நீதிமன்றுக்குச் சமர்ப்பித்தார்.

இதுவரை மீட்கப்பட்ட 40 சிதிலங்களில் இரண்டு சிதிலங்கள் விலங்குகளின் என்புகள், ஏனைய அனைத்தும் மனித என்புத் தொகுதிகள் என்ற விடயத்தை அவர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றார். அத்துடன், நிலத்திலிருந்து இரண்டு அடிக்குக் கீழ் தான் மனித எச்சங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மண் மாதிரி அடிப்படையில் குறித்த இடம் சதுப்பு நிலம் போல் தெரிவதாகவும், குறித்த இடம் தொடர்ச்சியாக மனித எலும்புகளால் நிறைந்தவொரு பகுதியாக உள்ளதா? அல்லது தனிப்பட்ட புதைகுழியா? என்பதை ஆய்வு செய்ய வேண்டுமெனவும் தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளதுடன், இவற்றின் அடிப்படையில் முதற்கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென மன்றில் கோரிக்கையை முன்வைத்தார்.

மூத்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ராஜ் சோமதேவ இதுதொடர்பான ஆய்வை மேற்கொள்வதற்குத் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துள்ளதாகவும் தனது அறிக்கையில் சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவநாதன் குறிப்பிட்டுள்ளார். அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான் முதற்கட்ட ஸ்கானர் மூலமான சோதனைகளை முடித்த பின்னர் அடுத்தகட்ட ஆய்வை மேற்கொண்டு அதன் பின்னர் தொடர்ச்சியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், காலநிலையைக் கருத்திற்கொண்டு இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் உத்தரவிட்டார். (அ-ம-26-125-66-20-27)

## யாழ். மாவட்ட...

மதியைப் பெறும் நோக்கிலேயே இணையவழியில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இதேவேளை, கிளிநொச்சி மாவட்டக் கூட்டமும் ஏற்கனவே இணையவழியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## யாழிலும்...

இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதாளக் குழுக்கள் உட்பட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கு கடந்தகாலங்களில் அரசியல் ஆசிர்வாதம் இருந்துள்ளது. ஆனால் இந்தக் குழுக்களுடன் மோதி அவற்றுக்கு எமது ஆட்சியில் முடிவு கட்டப்படும்.

குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கு எமது ஆட்சியின்கீழ் அரசியற் பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது. இந்த விடயத்தில் பொலிஸ் திணைக்களமும் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது. பதில் பொலிஸ்மா அதிபர் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். பாதாளக் குழுக்களின் வலையமைப்பில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் களையெடுக்கப்பட்டு வருகின்றனர்.

மித்தெனியவில் தந்தையும், இரு பிள்ளைகளும் சுட்டுக்கொலை, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு, கொட்டாஞ்சேனை கொலை, கல்கிஸ்ஸை பொலிஸில் ஆயுதங்களை எடுத்து குற்றக்குழுவிடம் ஒப்படைக்கப் பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

மினுவாங்கொடை சம்பவம்தவிர ஏனைய ஐந்து சம்பவங்களுடன் ஐந்து குழுக்கள் தொடர்புபட்டுள்ளன. அதாவது பாதாள குழுக்கள் ஒரேதடவையில் செயற்படத் தொடங்கியுள்ளன என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறான சம்பவம் இடம்பெறக்கூடிய இரு இடங்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். ஒன்று மட்டக்களப்பு, அடுத்த இடம் வடக்கு, ஏனெனில் தம்மால் வழிநடத்தக்கூடிய ஆயுதக்குழுக்களை சிலர் உருவாக்கியுள்ளனர். மட்டக்களப்பில் அப்படியொரு குழு உள்ளது. அதனை இயக்கலாம். யாழ்ப்பாணத்திலும் இப்படி குழுக்களை உருவாக்கினர். அவற்றையும் செயற்படுத்தக்கூடும்.

எனவே பாதாள குழுக்கள் ஒரே தடவையில் செயற்பட தொடங்கியுள்ளதன் பின்னணியில் திட்டமிட்ட சூழ்ச்சி இருக்கக்கூடும். பாதாளக் குழுக்கள் தனித்தனியே இயங்கினாலும் அவற்றை ஒரு கரமா வழிநடத்துகின்றது என்ற சந்தேகம் எமக்கு உள்ளது. இது தொடர்பில் சில அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை தொடர்பில் விசாரணை நடக்கின்றது.

ஊடகவியலாளர்களின் கொலைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் உட்பட கடந்தகால சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன. அவை தொடர்பான தகவல்களை நீதிமன்றத்துக்கு வழங்குவோம். அறுகம்பே சம்பவம் தொடர்பிலும் நாம் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்திருந்தோம். அமெரிக்க தூதரகம் பயண அறிவுறுத்தல் விடுப்பதற்கு முன்னரே நாம் சம்பவத்துடன் தொடர்புடைய சிலரை கைது செய்தோம்.

ஒரே தடவையில் ஐந்து குழுக்களை யாரால் இயக்க முடியும்? அப்படி இயக்கக்கூடிய குழுக்கள் உள்ளன. எனவே, இது தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டாகும்போது இராணுவத்தின் எண்ணிக்கையை ஒரு லட்சமாக மட்டுப்படுத்துவோம். விமானப்படை எண்ணிக்கை 18 ஆயிரமாகவும், கடற்படையினர் எண்ணிக்கை 40 ஆயிரமாகவும் இருக்கும். எண்ணிக்கை இவ்வாறு குறைந்தாலும் தொழில்நுட்ப ரீதியில் படைகள் வலுப்படுத்தப்படும். புதிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். தொழில்சார் பாதுகாப்புக் கட்டமைப்பு கட்டியெழுப்பப்படும்' - என்றார். (அ-ம-44)

## புலிகளுடைய...

கின்றது. அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையாலும், போதைப்பொருள் ஊடுருவல்களாலும் நாடு முழுவதும் தள்ளாடுகின்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்வாறான நிலைமைகள் இருந்ததில்லை. அதிலும் குறிப்பாக வடமாகாணத்தில் போதைப்பொருள்கள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

நான் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவன், வன்னித் தேர்தல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்துபவன். வன்னியில் இன்று மிகமோசமான வகையில் கசிப்பு, கஞ்சா, ஐஸ், ஹெரோய்ன் இன்னும் பலபெயர்களில் சட்டவிரோத போதைப்பொருள்கள் தாராளமாக கிடைக்கின்றன.

முல்லைத்தீவில் படையினர் மிக அதிகமாக உள்ளதாக பல புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவற்றுக்கு மத்தியில் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்து வருகின்றது என்றால், படையினரால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றே அர்த்தம்.

நான் கிராமங்கள்தோறும் மக்களின் குறைகேள் சந்திப்புகளை நடத்தி வருகின்றேன். அந்தவகையில் கடந்தமாதம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வெள்ளப்பள்ளம் என்ற கிராமத்தில் இடம்பெற்ற எனது மக்கள் குறைகேள் சந்திப்பில் பெருமளவு மக்கள் கூடியிருந்து என்னிடம் கைகூப்பி வேண்டினார்கள், சிலர் அழுதார்கள், தங்களுடைய குடும்பங்கள் சீரழிவதாகவும் இதனைக் கட்டுப்படுத்துங்கள், ஜனாதிபதியிடம் சொல்லுங்கள், நாடாளுமன்றத்தில் சொல்லுங்கள் எனத் தெரிவித்தனர். தங்களுடைய கிராமத்தில் கசிப்பு, கஞ்சா உள்ளிட்ட சட்டவிரோத போதைப்பொருள்களால் இதுவரை பலர் இறந்துவிட்டதாகவும், சிலர் இறக்கும்நிலையில் இருப்பதாவும் மக்களால் என்னிடம் முறையிடப்பட்டது.

இதேபோல பாரதிபுரம், வள்ளுவர்புரம், இளங்கோபுரம், தேராவில் பகுதிகளில் இதுவரை 43பேர் மாண்டுவிட்டதாகவும், இன்னும் இறக்கும் நிலையில் சிலர் இருப்பதாகவும் தெரிவித்து, தங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றும்படி வேண்டுகின்றார்கள். இப்படி நிலைமைகள் இன்னும் பல கிராமங்களில் உள்ளன. நிலமைகளைச் சற்று எண்ணிப்பாருங்கள். பொலிஸார் என்ன பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஏன் இவர்களால் போதைப்பொருள் உற்பத்திகளையும், ஊடுருவல்களையும் கட்டுப்படுத்த முடியவில்லை?

புலிகளின் காலத்தில் 'தூய இலங்கை' திட்டம் நாடு முழுவதும் இருக்கவில்லை. ஆனால், அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் தூய்மையாகவே இருந்தன - என்றார். (அ-ம-26)

## படை முகாம்களை...

என்று எதிரணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

டயஸ்போராக்களின் தேவைக்காக வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுங்கள். வேண்டாம் எனக் கூறவில்லை. ஆனால்படையினரை தியத்தலாவைக்கு கொண்டுவந்து குவிக்க வேண்டாம். தியத்தலாவையில் விவசாயம் செய்யப்பட்ட இடங்களில் எல்லாம் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாயம் செய்வதற்கு தற்போது ஒரு மலை கூட இல்லை. விவசாயிகள் விரட்டப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்துக்கு நீதியை வழங்குங்கள். காணியை விடுவியுங்கள். முகாம்களை அகற்றுங்கள். அதில் எமக்கு பிரச்சினை இல்லை. அதேபோல எமது மக்களுக்கும் அநீதி இழைக்க இடமளிக்கமுடியாது' - என்றார். (அ-ம-44)

## அவசியமானவை...

வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளில் மிக அத்தியாவசியமான காணிகளைத் தவிர ஏனையவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று விவாதிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கிலுள்ள முகாம்கள் மற்றும் படையினர் பயன்படுத்தும் காணிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் (சிறீதரன்) கருத்து வெளியிட்டிருந்தார். நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் நடைபெற்ற பாதுகாப்புசார் ஆலோசனைக் குழு கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

எனவே, மிகவும் அத்தியாவசியமான காணியை மட்டும் வைத்துக்கொண்டு, ஏனையவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பல வருடங்களாக மூடப்பட்டிருந்த பலாலி, அச்சுவேலி வீதி திறக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் (சிறீதரன்) கூறியதுபோல வடக்கு, கிழக்கில் 3 லட்சத்து 17 ஆயிரம் படையினர் இல்லை. முப்படைகளிலும் மொத்தமாக 2 லட்சத்துக்கும் குறைவான படையினரே தற்போதுள்ளனர் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்து...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருத்து அதிகாரிகள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக விபத்து மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகள் மூடப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

விபத்து மற்றும் அதிதீவிரப் கண்காணிப்பு பிரிவில் ஆகக் குறைந்தது ஆறு மருத்துவர்கள் கடமையில் இருக்க வேண்டிய நிலையில், கடந்த சில மாதங்களாக மூன்று மருத்துவர்களே கடமையில் உள்ளனர். அவர்கள் 24 மணிநேரமும் தமது கடமைகளை அர்ப்பணிப்புடன் வழங்கி வருகின்றனர். எனினும், அவர்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில்மயக்கமருந்துநிபுணரினதோ அல்லது தீவிர சிகிச்சை நிபுணரினதோ வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருவதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாக இருந்து வருகின்றது.

இந்த நிலையில் குறித்த பிரிவில் தற்காலிகமாக தாதிய உத்தியோகத்தர் ஒருவர், பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் இவர் கடந்த இரு மாதங்களாக அங்கு சக தாதிய உத்தியோகத்தர்களுடனும், இறுதியாக மருத்துவர்களுடனும் முரண்பாடுகளை உருவாக்கி வந்தார். எனினும், அவர் தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் பலவும் நிர்வாகத்தால் உரிய முறையில் கையாளப்படவில்லை. நீண்ட காலநீடிப்புக்குப் பின்னர் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு, அவரை வேறு பிரிவுக்கு மாற்றுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டது. எனினும், அந்தப் பரிந்துரையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, குறித்த பிரிவில் பாதுகாப்பற்ற - ஆரோக்கியமற்ற ஒரு சூழல் உருவாகியுள்ளது - என்றுள்ளது. (அ-ம-26)

## வடக்கில்...

தற்போது இலங்கைக்கு தென்கிழக்குத் திசையில் நகர்ந்து கொண்டிருகின்றது. இதன்விளைவாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் என்று ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்ட நிலையில், வடக்கில் நேற்று இரவிரவாகக் கடும் மழை கொட்டித்தீர்த்தது. (அ-ம-இ)

## மார்ச் 4...

செம்மணியில் மீட்கப்பட்ட மனித என்பு எச்சங்கள் தொடர்பான வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை ஆராய்ந்த நீதவான், மார்ச் மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் முதற்கட்டமாக மன்றில் இதுதொடர்பான கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டுமெனவும், இந்தக் கலந்துரையாடலில் ஜே94 கிராம அலுவலர், நல்லூர் பிரதேச செயலாளர், நல்லூர் பிரதேசசபையின் செயலாளர், யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர், வழக்குத் தொடுநர் வை. கிருபாகரன், வழக்குத் தொடுநர்கள் சார்பாக இரண்டு சட்டத்தரணிகள் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்க வேண்டுமெனவும் கட்டளையிட்டார்.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது வழக்குத் தொடுநர் வை.கிருபாகரன், வழக்குத் தொடுநர் சார்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய அதிகாரி, ஜே94 கிராம அலுவலர், சிந்துபாத்தி மயான நிர்வாகசபையின் செயலாளர், உபதலைவர் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். வழக்குத் தொடுநர் சார்பில் இரண்டு சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகி வாதாடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம-26-125-66-20-27)

## செம்மணிப்...

சட்டமருத்துவ அதிகாரி அறிக்கையிட்டுள்ளார். எனவே, இந்தப்புதைகுழிக்குள் சிறுவர்களும் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

செம்மணி - சிந்துப்பாத்தி மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேச சபையினர் அண்மையில் கிடங்குகளை வெட்டியபோது அதற்குள் இருந்து மனிதச் சிதிலங்கள் எனச் சந்தேகிக்கப்படும் பொருள்கள் மீட்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா கடந்தவாரம் சம்பவ இடத்தை நேரடியாகப் பார்வையிட்டிருந்தார்.

இதன்போது, குறித்த கிடங்குக்குள் இருந்து மீட்கப்பட்ட சிதிலங்கள் மனித என்புத்தொகுதிகளா? என்பதை உறுதிப்படுத்த பகுப்பாய்வு நடத்துமாறும், அந்தப் பகுதிகளில் விரிவான ஸ்கான் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தியிருந்தார். நீதவானின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில், மீட்கப்பட்ட சிதிலங்கள் மனித என்பு எச்சங்களே என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் பாற்பற்களும், அந்த மனித என்பு எச்சங்களுடன் சேர்ந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## மீண்டும்...

எரிபொருள் விநியோகஸ்தர்கள் நேற்று நள்ளிரவு முதல், எரிபொருளை விநியோகிப்பதில்லையென திட்டமிட்டுள்ளனர் என்றும், அவர்கள் புதிய கொள்வனவுகளை மேற்கொள்ள விண்ணப்பிக்கவில்லை என்றும் நேற்று இரவு தகவல்கள் வெளியாகியிருந்தன. இதையடுத்தே, நாட்டின் நூற்றுக் கணக்கான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகள் ஏற்பட்டிருந்தன.

எனினும், எரிபொருள் விற்பனையில் எந்தப் பின்னடையும் இடம்பெறவில்லை என்றும் சேவைகள் வழக்கம்போல இடம்பெறுகின்றன என்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ராஜகருணா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகத்தர்கள் எரிபொருள் விநியோகத்தை நிறுத்துவதாக எந்த உறுதிப்படுத்தலையும் இதுவரை தெரிவிக்கவில்லை என்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)


# மரண அறிவித்தல்

## விஸ்வலிங்கம் இராசபூபதி



தோற்றம்
09.05.1950

மறைவு
24.02.2025

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும், மந்துவில் கிழக்கு கொடிகாமம் வேம்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் இராசபூபதி கடந்த 24.02.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருவம்பலம் - சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், மஞ்சுளா (கனடா), கிருஷ்ணரூபன், விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரஞ்சன், ஜெகஜோதி, பகீரதன் ஆகியோரின் அன்பு மாமியும், தேவசேனா, சனாதனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்,
வேம்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/54533) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுப்பூட்டல் பேச்சுகள் இலங்கையில் உயர்வு

## ஐ.நா. சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 1
இலங்கையில் வெறுப்பூட்டும் பேச்சுகள் அதிகரித்துவருவதாக இலங்கைக்கான ஐ.நா. அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெறுப்பூட்டும் பேச்சுகள் வடக்கு - கிழக்கு மற்றும் மலையக மக்கள், சிறுபான்மை யினரான முஸ்லிம், கிறிஸ்தவ, இந்து சமூகங்களுக்கு எதிராகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனாதிபதித் தேர்தலின்போதே அதிகளவான வெறுப்பூட்டும் பேச்சுகள் இடம்பெற்றன என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச-6)

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பான்சி கடை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
மாதாந்த சம்பளம் - 35000/-
மதிய உணவிற்கு 300 ரூபா வழங்கப்படும்.
Light vehicle வாகனம் ஓடுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(CS/2629) J-1

**075 225 1078**

**வேலையாட்கள் தேவை**

புத்தூரில் இயங்கும் அரைக்கும் ஆலை ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் (ஆண்) தேவை.
செவிப்புலன் அற்றோர், வாய்பேச முடியாதவர்களுக்கு முன்னுரிமை

**077 373 5261**

**பணியாளர் தேவை**

கல் அரிவு (மிசின்) தூண் அரிவு, தச்சுவேலை, வெல்டர் வேலை, பூச்சாடி, கிறில் கல் வேலை, பில் கிளாக் (Bill Clerk) ஆகிய வேலைகளுக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்பு: **077 457 3580**

**தானியங்கி தொழில்நுட்பம்**

புலம் பெயர் மற்றும் உள்ளூர் உறவுகள் தங்களது ஆளில்லா வீடுகளுக்கு ஆட்கள் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தி தருகின்றோம்.
(தானியங்கி தொழில்நுட்பம் மூலம்

Whatsapp : **076 037 6611**

# 31ம் நாள் நினைவஞ்சலி

## கோபாலபிள்ளை தெய்வேந்திரன்

மண்ணில் 12.05.1952 — விண்ணில் 28.01.2025



### தெய்வேந்திரன் என்னும் தேவமந்திரம்

பூமியின் கதவு உடைபட்டது - எங்கள்
சாமி ஏனோ விடைபெற்றது சந்தோஷம் எம் வானில்
தடைப்பட்டது கண்மடல்நீர் நிரம்பி பெருக்கெடுத்தது

"அறம்" அதன் நிறம் மாறாது வாழ்ந்தீர்
பெற்றவர்கள் உற்றவர்கள் என்பதை தாண்டி ஊர் உலகத்தால் மதிக்கப்பட்டவர்
தீங்கு என்பதை தினை அளவும் எண்ணாத
அதிமானுடன் அப்பழுக்கற்ற அற்புதன் பெரிதாய் சொல்வதெனில்
உங்களைப்போல் வாழ்ந்தவர்கள் அரிது

இன்று
ஊ(பா)ர் போற்ற நாம் வாழ அடி எடுத்தும் கொடுத்தீரே.....
ஆமி வந்த போதும் அசராத சாமியே
இடம்பெயர்ந்து இடர் பட்டபோதெலாம் - எமைத் தாங்கினீர்
மரணம் மணத்த தருணங்களில் கூட
மலையென அருகிருந்து
அருள்பாலித்தீர் எதற்கும் அஞ்சாத துஞ்சாத அரனே எமக்கான அரசே
ஏன் விடைபெற்றீர்..?

அப்பா....!
உங்களை நினைக்க நினைக்க மனதில் நூறு நினைவுகள் தோன்றி மறைகிறது -
உண்மையில் நீங்கள் மறைந்துவிட்டதை மனம் ஏற்க மறுக்கிறது

உருகி உருகி எமை வளர்த்த வரமே - எங்கள் கண்களில் அருவி பெருகி பெருகி
வழிகிறது நெஞ்சுநெருப்பில் எரிகிறது.

நீங்கள் ஓய்வு எடுத்து ஓரமாய் இருந்ததை கண்டதில்லை நாங்கள்

அடிமனதில் பாரம் எதுவெனில் எங்களுக்கு... இளவேனில் காலம் வந்தபோது
உங்களுக்கு இலையுதிர் காலம் வந்துவிட்டது .....
எங்கள் காலதேவனை காலன் கொன்று விட்டான்
சொற்பனத்தில் நினைக்காத சோகத்தை சொந்தமாக்கி விட்டு
எங்கள் ஐயனே நீரும் போய்விட்டீர்

ஆறாத சோகத்துடன் கண்ணீர் குடம் உடைத்து விடை தருகிறோம்...
சென்று வாருங்கள் எங்கள் குல சாமியே
ஆத்மா அழிவில்லாதது......

புங்குடுதீவு- 12. குடும்பத்தினர்.

(cs) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.